சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 9698/E/2024**

திரு.M.J.ஜெயக்குமார் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், மாதவரம் வட்டம், சென்னை மாவட்டம்-66. -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.M.J.ஜெயக்குமார் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.B.M.எல்லுசா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மாதவரம் வட்டம் சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 04.03.204 |
| **<u>கோரிய தகவல்</u>**, சென்னை மாவட்டம், மாதவரம் தாலுக்கா, புழல் கிராமம் சர்வே எண் 59/1A, இந்த நிலம் அரசு கால்வாய் பணிக்கு எடுக்கப்பட்டதா? இல்லையா?, சர்வே எண். 59/1A எவ்வளவு நிலம் எடுக்கப்பட்டது, மீதி நிலம் எவ்வளவு உள்ளிட்ட 6 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். மனுவானது சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர், சென்னை அவர்களின் 08.05.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து | |

| | |
|---|---|
| துணை வட்டாட்சியர், மாதவரம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.002/அ4/2025, நாள் 12.12.**2025** |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 04.05.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 20.07.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.2044/அ2/2026, நாள் 01.07.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலரின் வாதத்தின் மீதான எதிர் வாதத்தினை எடுத்துரைக்க மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

2. பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள தகவல்களுக்கு ந.க.எண்.002/அ4/2025, நாள் 12.12.2025 மற்றும் ந.க.எண்.2044/அ2/2026, நாள் 01.07.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது.

b) மேலும், 04.03.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பொதுத் தகவல் அலுவலர்/ நேர்முக உதவியாளர் (பொது), சென்னை அவர்களுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவினை பெற்றுக்கொண்ட பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) சென்னை அவர்கள் சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் 08.05.2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மாதவரம் அவர்களுக்கு மாற்றியுள்ளார்.

c) மேற்படி மனுவினை வரையறுக்கப்பட்ட 5 தினங்களுக்குள் சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனுவினை தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பிற்கு மாற்றத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை தனியரிடமிருந்து பெற்று, அதுகுறித்த தனது அறிக்கையினை **இவ்வாணையத்தில் 04.08.20256 அன்று நேரில் சமர்ப்பிக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), சென்னை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது**.

d) மேலும், மேற்படி மனுவினை சட்டப் பிரிவு 6(3)-ன்படி பெற்றுக்கொண்டு, வரையறுக்கப்பட்ட 30 தினங்களுக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை தனியரிடமிருந்து பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக இவ்வாணயத்தில் **04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

e) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை மேற்சொன்ன தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9698/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை-01.

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மாதவரம் வட்டம், சென்னை மாவட்டம்-66

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மாதவரம் வட்டம், சென்னை மாவட்டம்-66.

**மேல்முறையீட்டாளர்**

திரு.M.J.ஜெயக்குமார்,
17D, பெருமாள் கோயில் தெரு,
41, மங்களம் V.ஆரணி (அஞ்சல்),
கும்மிடிப்பூண்டி (வட்டம்),
திருவள்ளூர் மாவட்டம்

Copy to: File MP/PA-